3. அறிவிப்பு

கவன ஈர்ப்பு ஒத்திவைப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 55-இன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு, உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகிறது.*

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. சி. சிவசாமி.*

திரு. சி. சிவசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, 2001-2002ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, மதிப்பீட்டுக் குழு, தனது ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட கல்லூரிக் கல்வி குறித்த குழுவின் ஆறாவது அறிக்கையினையும், குடிநீர் வழங்கல் குறித்த குழுவின் ஏழாவது அறிக்கையினையும், குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

(ஆ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள்.*

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, 2001-2002ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 68 முதல் 75 வரையிலான 8 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*